## முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## O.S.No.96/2022

### சாட்சியின் சான்றுரை PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | விஜயபாலன் | வட்டம் | - | |
| த/பெ | - | ' அப்பாவு நயினார் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

13.12.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கும் வாதிக்கும் திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 1968ல் நடைபெற்றது. நான் அப்போது கூட்டுரவு சங்கத்தில் சூப்பரவைசராக வேலை செய்தேன். அது அரசாங்க வேலை இல்லை. குவாசி அரசாங்க வேலை ஆகும். நான் என் வேலை தொடர்பாக பணி மாறுதலில் வேறு ஊருக்கு சென்று வருவேன் என்றால் சரியல்ல. என் வேலையில் பணிமாறுதல் கிடையாது. என் மாமனார் இறந்த தேதி 02.05.1998 ஆகும். என் மாமனாருடைய சொத்தை விற்பது சம்மந்தமாக நான் காவல் துணை கண்காணிப்பாளர், விழுப்புரம் அவர்களிடம் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரின் பேரில் விசாரணை சுமார் 2,3 மாதம் நடைபெற்றது என்றால் தோரயமாக தெரியாது. ஆனால் இருக்கலாம். அந்த விசாரணை போது மாமனாரின் சொத்தின் விவரத்தை நான் கொண்டுவந்து கொடுத்தேனா என்றால் இல்லை. என் மைத்துனர் சொன்னதை வைத்து தான் சொன்னேன். அந்த சொத்து சம்மந்தமாக நானும் என் மனைவியும் 1ம் பிரதிவாதியும் பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் இல்லை. அவ்வாறு சமாதனமாக சொன்றோமா என்றால் சமாதனமாக

செல்வதற்காக சொன்னார்கள் ஆனால் பிரதிவாதி அதற்கு கட்டுப்படவில்லை. 2022ல் எனக்கும் பிரதிவாதிக்கும் எதன் அடிப்படையில் பாகம் ஏற்பட்டது என்றால் என் மைத்துனர் சொன்னதன் அடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது. அதற்கு சம்மதித்து தான் நான் பாகப்பிரிவினைக்கு ஒத்துக்கொண்டேன் என்றால் அவர் கொடுத்ததால் ஒத்துக்கொண்டேன். அந்த பாகப்பிரிவினையில் எங்கள் உறவினர்களோ ஊர்காரர்களோ இருந்தார்களா என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஏற்பட்ட போது என் மனைவியுடன் நான் பத்திரபதிவு அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். பத்திரங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் பத்திரம் அதுதானா என்றால் ஆம். 3வது பக்கத்தில் பஞ்சாயத்தாரின் முன்னிலையில் ஏற்பட்ட இதனிடையில் கண்டுள்ள ஏற்ற இறக்கங்களுக்கு சம்மந்தப்பட்டு பின்வருமாறு பாகம் பிரிக்கப்பட்டது என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்ததில் 7,8,9ல் விவரிக்கப்பட்ட சொத்துவிவரத்தில் உள்ள சொத்துக்கள் விழுப்புரம் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது மாமனார் பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் 1வது வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் இல்லை. எனது அசல் வழக்கில் வா.சா.ஆ 10,11,12 ஆகிய ஆவணங்கள் பட்டா ஆகும் என்றால் சொத்துக்குண்டான ஆவணங்களை கொடுத்தேன் அதை நான் விரிவாக பார்க்கவில்லை. கடந்த 05.01.2022ல் நடந்த பாகப்பிரிவினை வாதியின் சம்மதத்தில் நடந்தது என்றால் அவ்வாறு நடந்தது உண்மை தான். ஆனால் சொத்தை குறைத்து சொன்னது தெரியாது. காவல் நிலையத்திலிருந்து வந்து பஞ்சாயத்தாரால் பேசி ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ள சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களுக்கு பாகம் நாங்கள் பேசியபடி தான் நடந்தது என்றால் சரியல்ல. வேறு நீதிமன்றத்தில் வழக்குகள் எதுவும் இல்லை. பாகப்பிரிவினை பின்னிட்டு பிரதிவாதிக்கும் எனது

மனைவிக்கும் மனகசப்பு ஏற்பட்டது என்றும் அது எனது துாண்டுதலின் பேரில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள எனது மாமனார் பெயரில் உள்ள சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுக்கொண்ட பரிகாரமும் தவறு என்றும் அதற்கான நீதிமன்ற கட்டணம் சரியாக கட்டவில்லை என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.